# NSW HEALTH

## COVID-19 Key Points – Wednesday 6 October 2021

NSW GOVERNMENT

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 88.6%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 67.7% -ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது.
- உங்கள் தொடர் முயற்சிகளுக்கு உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. நாங்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் 10.45 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி மருந்தளவுகளைச் செலுத்தியுள்ளோம்!
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 594 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமாக, 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
- உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- மிக இலேசான நோயறிகுறிகள் இருந்தாலும்கூட, பரிசோதனையைச் செய்துகொள்ளத் தயவுசெய்து தொடர்ந்தும் முன் வாருங்கள். நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், 500-க்கும் மேற்பட்ட கோவிட்-19 பரிசோதனை இடங்கள் உள்ளன.
- குறிப்பாக, ஜிண்டாபைன் (Jindabyne), ஃபிக்ட்ரீ (Figtree), மெரிவேதர் (Merewether), வோல்சென்ட் (Wallsend), செஸ்னொக் (Cessnock), ப்ளூ ஹேவன் (Blue Haven), மவுண்ட் ட்ரூயிட் (Mount Druitt), கில்ட்ஃபோர்ட் (Guildford), பெல்மோர் (Belmore) மற்றும் க்ரொய்டன் பார்க் (Croydon Park) ஆகிய இடங்களில் வசிப்பவர்களை, நோயறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், தயவுசெய்து தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்.
- சில கடும் சவாலான மாதங்களின்போதும்கூட, வழக்கமான நடவடிக்கைகளிலிருந்து தடம் பிறழாமல், அவற்றைத் தொடர்ந்த உங்கள் அனைவருக்கும் நன்றி. நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவதையும், தடுப்பூசி விகிதங்கள் அதிகரிப்பதையும் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.
- நாங்கள் அனைவரும், நாம் விரும்பும் விடயங்களை மீண்டும் செய்ய ஆரம்பிக்க விரும்புகிறோம், ஆனால் முடக்கத்திலிருந்து வெளிவரும் அதே வேளை, நாம் அனைவரும் எச்சரிக்கையுடன் செயற்படுவதும், புதுப்பிக்கப்பட்ட சுகாதார ஆலோசனையைப் பின்பற்றுவதும் மிகவும் முக்கியம் ஆகும்.